சுருக்கம்

தொடக்கக் கல்வி – தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் தேர்ச்சி பெற்று வேறு பள்ளிக்கு செல்லும் போதும், பிற காரணங்களால் வேறு பள்ளியில் சேரும் போதும் அவர்கள் தொடர்ந்து பயில தகுதி நிர்ணயம் செய்து "பதிவுத் தாள்" (Record Sheet) வழங்கும் நடைமுறையை மாற்றி பள்ளிக் கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்கு வழங்கும் மாற்றுச் சான்றிதழைப் போல (Transfer Certificate) தொடக்கக் கல்வி இயக்ககத்திற்கும் மாற்று சான்றிதழ் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வி (தொக3(1) துறை

அரசாணை (நிலை) எண்.101

நாள் 22.05.2017
திருவள்ளுவர் ஆண்டு–2048
வைகாசி– 8.
படிக்கப்பட்டவை:–

1. தமிழ்நாடு தொடக்கக் கல்வி சட்டம் –1920 பிரிவு 44 (விதி 5).
2. குழந்தைகளின் இலவச கட்டாயக் கல்விச் சட்டம் – 2009, பிரிவு 5(3).
3. தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.7072/ ஜே2/ 2017, நாள் 16.05.2017.

-----

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட சட்டத்தின்படி, தொடக்கக் கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கும் 1 முதல் 5 வகுப்புகள் கொண்ட தொடக்கப் பள்ளிகள் மற்றும் 1 முதல் 8 வகுப்புகள் கொண்ட நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் தேர்ச்சி பெற்று வேறு பள்ளிகளுக்கு செல்லும்போதும், பிற காரணங்களால் தற்போது பயிலும் பள்ளியிலிருந்து வேறு பள்ளியில் சேரும்போதும் அவர்கள் தொடர்ந்து பயில தகுதி நிர்ணயம் செய்து "பதிவுத்தாள்" (Record Sheet) வழங்கும் நடைமுறை தற்போது தொடக்கக் கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பின்பற்றப்பட்டு வருகிறது.

2. பள்ளிக் கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கும், 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் 11, 12 ஆம் வகுப்பு பயிலும் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் தேர்ச்சி பெற்று வேறு பள்ளிக்கு செல்லும்போதும், பிற காரணங்களால் தற்போது பயிலும் பள்ளியிலிருந்து வேறு பள்ளியில் சேரும்போதும், அவர்கள் தொடர்ந்து பயில தகுதி நிர்ணயம் செய்து (Tamil Nadu Education Rules, Chapter-III Rule 34–ன்படி) மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate) வழங்கப்பட்டு வருகிறது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட சட்டத்தின்படி, ஒரு பள்ளியிலிருந்து வேறொரு பள்ளிக்கு தேர்ச்சி மற்றும் மாற வேண்டிய அவசியம் உள்ள ஒரு குழந்தைக்கு பிரிவு 5(3)–இன்படி வேறொரு பள்ளியில் சேர்த்துக் கொள்வதற்கு அந்த குழந்தை படித்த பள்ளியின் தலைமையாசிரியர் அல்லது பொறுப்பாளர் உடனடியாக மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate) வழங்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பள்ளிக் கல்வி இயக்ககம் மற்றும் மெட்ரிக் பள்ளி

இயக்ககத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பள்ளியை விட்டு மாறுதல் பெறும்போது மாணவர்களுக்கு வழங்கப்படும் மாற்றுச் சான்றிதழினைப் போல, தொடக்கக் கல்வி இயக்ககத்தின் கீழ் பயிலும் மாணவர்களுக்கும் மாற்று சான்றிதழ் (Transfer Certificate) வழங்கவும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு சேர்க்கை மற்றும் நீக்கப் பதிவேடு (Admission withdrawal Register) பராமரிப்பது போலவே, தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலும் சேர்க்கை மற்றும் நீக்கப் பதிவேடு (Admission withdrawal Register) பராமரிக்கவும் உரிய ஆணை வழங்குமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

4. மேற்கண்ட நிலையில், தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் தேர்ச்சி பெற்று வேறு பள்ளிக்கு செல்லும்போதும், பிற காரணங்களால் வேறு பள்ளியில் சேரும்போதும் அவர்கள் தொடர்ந்து பயில தகுதி நிர்ணயம் செய்து "பதிவுத் தாள்" (Record Sheet) வழங்கும் தற்போதுள்ள நடைமுறையை மாற்றி, பள்ளிக் கல்வி இயக்ககம் மற்றும் மெட்ரிக் பள்ளி இயக்ககத்தின் கீழ் இயங்கும் அனைத்து வகை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் மாற்றுச் சான்றிதழினை போலவே, தொடக்கக் கல்வி இயக்ககத்தின்கீழ் இயங்கும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும் மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate) வழங்கலாம் என்றும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு சேர்க்கை மற்றும் நீக்கப் பதிவேடு (Admission withdrawal Register) பராமரிப்பது போலவே, தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலும் சேர்க்கை மற்றும் நீக்கப் பதிவேடு (Admission withdrawal Register) பராமரிக்கலாம் என்றும் அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது,

(ஆளுநரின் ஆணைப்படி)

த.உதயச்சந்திரன்
அரசுச் செயலாளர்

பெறுநர்
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மெட்ரிக் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6.
இயக்குநர், சமூகநல இயக்ககம், சென்னை–32.
இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககம், சென்னை–5.
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சீர்மரபினர் நல இயக்ககம், சென்னை–5.
முதன்மை தலைமை வனப் பாதுகாவலர், சென்னை–15.
இயக்குநர், சமூகப் பாதுகாப்பு இயக்ககம், சென்னை.
இயக்குநர், கல்லூரி கல்வி இயக்ககம், சென்னை–6.
இயக்குநர், தொழிற்கல்வி இயக்ககம், சென்னை.
அனைத்துப் பல்கலைக்கழக பதிவாளர்கள்,
செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.
இயக்குநர், எழுதுபொருள் அச்சுத் துறை இயக்ககம், சென்னை–79
(தமிழக அரசிதழில் வெளியிடுவதற்காக)
இயக்குநர், தகவல் மற்றும் செய்தித் துறை, சென்னை–2.

பதிப்பாசிரியர், தமிழரசு இதழ், சென்னை–2.

நகல்

மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை–9.

பள்ளிக் கல்வித் துறை செயலர் அவர்களின் முதுநிலை
முதன்மைத் தனிச்செயலர், சென்னை–9.

பள்ளிக் கல்வித் துறையின் அனைத்து துறைத் தலைவர்கள், சென்னை–6.

பள்ளிக் கல்வித் துறையின் அனைத்து பிரிவுகள், சென்னை–9.

தொடர்புடைய அனைத்து துறைகள்/இயக்ககங்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.